செ.வெ எண் : 8 / தின் / 2019 நாள் : 3.6.2019

# செய்தி குறிப்பு

15–06–2017 நாளிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின் அரசாணை (நிலை)எண். 104–ன்படி வாரிய குறிப்பாணை எண். ஒது.1.6/8697/09 நாள் 21-02-2019 உத்திரவிற்கிணங்க **திருச்சி வீட்டுவசதிப் பிரிவு** திட்டப்பகுதியில் ஒதுக்கீடு பெற்றுள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டிச்சலுகையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு பாக்கித்தொகையை ஒரே தவணையில் செலுத்தினால், உடன் விற்பனை பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டு வாரியத்திற்கு இரத்து நீக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்ட இனங்களுக்கும் நீதி மன்ற வழக்கு தொடுத்துள்ள இனங்களுக்கும் வாரிய அனுமதியின்றி இச்சலுகையை வழங்க இயலாது. இச்சலுகை 31–03–2020 வரை மட்டுமே அமுலில் உள்ளது. பாக்கித் தொகை முழுவதுமாக செலுத்துமுன் தங்கள் வசம் உள்ள அனைத்து ஆவணங்கள் மற்றும் இரசீதுகளுடன் வேலை நாட்களில் இவ்வலுவலகம் வந்து குறைபாடுகளை சரி செய்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இச்சலுகையின் அடிப்படையில் கணக்கீட்டின்படி ஏற்கனவே கூடுதலாக செலுத்தப்பட்டிருக்கும் வரவு தொகை ஏதேனும் இருப்பின் அத்தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. இச்சலுகையை பயன்படுத்தி விற்பனை பத்திரம் உடன் பெற்றுக்கொள்ளுமாறு திருச்சி வீட்டு வசதிப் பிரிவு செயற் பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் தெரிவித்துள்ளார்.

3/6/19

செயற்பொறியாளர் மற்றும்
நிர்வாக அதிகாரி
திருச்சி வீட்டுவசதிபிரிவு
திருச்சி–20